# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690
தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg



| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |



| 05 மே 2019 | பாஸ்கு காலம் - மூன்றாம் ஞாயிறு | மூன்றாம் ஆண்டு |
|---|---|---|



## உங்கள் சிந்தனைக்கு...

அன்புச் சகோதரர் சகோதரிகளே உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அன்பு வாழ்த்துக்கள்! பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறை இறை மன்னிப்பை உணர்த்தும் ஞாயிறாகக் கொண்டாட வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம். உயிர்த்த இயேசு, தனது பாடுகளின் போது தனியே தன்னை விட்டுவிட்டு ஓடிய சீடர்களைத் தேடிச் சென்று மன்னிப்பின் மாண்பைத் தன் செயல்களின் மூலம் காட்டி அவர்களிடமே தன் இறையாட்சியை உலகமக்களுக்குப் பறைசாற்றும் பணியைத் தருகிறார்.

அத்துடன் நிற்காமல், தன் உடனிருப்பு உலகம் முடியும் வரை தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதைச் சீடர்களின் மனதில் ஆழமாகப் பதிவுச் செய்கிறார். மூன்று முறை மறுதலித்த பேதுருவிடம் அவரின் ஆழமான அன்பை வெளிக்கொணர்ந்து அவரிடமே தன் ஆடுகளாகிய நம்மை வழிநடத்தும் தலைமைப் பொறுப்பைக் கொடுக்கின்றார். இதுதான் அவரது மாபெரும் இரக்கம். நாமும் மன்னிப்பின் மாண்பை உணர்ந்து இயேசுவின் உண்மைச் சீடர்களாக வாழ இறையருளைப் பெற வேண்டி இன்றைய திருப்பலியில் இயேசுவை நோக்கி மன்றாடுவோம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக “Church of Our Lady of Lourdes” என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் “Building Fund” என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## இரண்டாவது காணிக்கை

இன்று திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாவது காணிக்கை, தூய வின்சென்ட் தெ பவுல் சபையினர் செய்யும் நற்பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். உங்கள் தாராள மனதிற்கு மிக்க நன்றி.

**மே மாதம், நம் தாய் அன்னை மரியாளுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட வணக்க மாதம். இந்த மாதத்தில் ஒவ்வொரு நாளும் குடும்ப செபமாலை சொல்வோம். நம் குடும்பங்களிலும், உலகமெங்கும் அமைதி நிலவ அன்னை மரியாளின் பரிந்துரையை மன்றாடுவோம்.**



## உயிர்ப்புக்கால ஆன்மீக கையேடு

நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்டத்தின் புதிய நற்செய்தி அறிவிப்பு மையத்தினால், உயிர்ப்புக்கால ஆன்மீக கையேடு தமிழ் மொழியில் தயார் செய்யப்பட்டு நமக்காக வழங்கப்பட்டுள்ளது. தயவு செய்து அனைவரும் ஒரு பிரதியை எடுத்துச் சென்று பயன்பெறவும்.

ONE
OFFICE FOR THE NEW EVANGELISATION

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில்** இரவு 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!

## பொது விடுமுறைத் திருப்பலி நேரம்

**20-05-2019 திங்கள் - விசாக தினம்**




காலை 10 மணிக்குத் தமிழ் திருப்பலி
(மதியம் 12மணி முதல் நம் ஆலய வளாகத்தின்இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும்.)
அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

**11-05-2019 சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**



இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.



## திருமண முன் தயாரிப்புக் கருத்தரங்கு




**19-05-2019 ஞாயிறு, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை**
**இடம்: தூய லூர்து அன்னை ஆலயப் பல்நோக்குச் சமூகக்கூடம்**

முன்பதிவுக் கட்டணம் $30 செலுத்தி முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்வோருக்கு, கருத்தரங்கு முடிந்தவுடன் பங்கேற்புச் சான்றிதழ் தரப்படும்.

**தொடர்பு: திரு. ரெக்ஸ் (9822-6171)**



## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்

ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் ஞானத்தில் வளர அனுப்பி வையுங்கள்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | திருத்தூதர் பணி 5:27a-32,40b-41 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 30: 1, 3-5. 10-12 |
| **பதிலுரை:** | ஆண்டவரே, உம்மைப் புகழ்வேன்: ஏனெனில், நீர் என்னைக் கைதூக்கி விட்டீர். |
| **இரண்டாம் வாசகம்:** | திருவெளிப்பாடு 5:11-14 |
| **வாழ்த்தொலி:** | கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். அனைத்தையும் படைத்தவர் அவரே; மானிடக் குலத்தின்மீது இரக்கம் கொண்டவரும் அவரே. அல்லேலூயா. |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 21:1-19 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

